**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 52/2022**

**PW.2**

**Date: 12.06.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னப்பராஜ் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | லியோபிரான்சிஸ் | மதம் | |
| கிராமம் | கடலாடிகுளம் | தொழில் | |
| வட்டம் | விழுப்புரம் | வயது | 18 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **12th June 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. கற்றறிஞர் வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை :**

1. நான் பி.ஏ தமிழ் முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். அ.சா. 1 என் அம்மா. என் அண்ணன் சகாயராஜ். எதிரி ரட்சகதாஸ் எனக்கு தெரியும். விடுதி காப்பளராக இருந்தார். நான் கோவளத்தில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் உள்ள விடுதியில் தங்கி அங்கேயே படித்து வந்தேன். என் அண்ணன் சகாயராஜீம் அங்கு தான் படித்தார். அந்த சம்பவம் நடந்தபோது நான் 7 ஆம் வகுப்பு படித்து வந்தேன். 13/08/2018 அன்று இரவு 8

மணியளவில் போனை காணவில்லை என்று என்னை விடுதி காப்பாளர் ரட்சகதாஸ் என்னை அழைத்தார்.

2. போனை எடுத்தாயா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். அந்த போனை நான் தான் எடுத்தேன் என்று என்னுடைய கையில் அடித்தார். அதன்பின் கன்னால் என்னுடைய முழங்கை இரண்டிலும் சூடு வைத்தார். மூங்கில் கொம்பால் என்னை தாக்கியதில் எனது இடது நெற்றி பொட்டில் காயம் ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் மின்சார கருவியால் தான் எதிரி எனக்கு சூடு வைத்தார். **(Hotmelt glue gun அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் தண்ணீர் கேட்தற்கு அவர் சிறுநீரை பிடித்து வந்து கொடுத்தார். என்னுடைய கை கால்களை கட்டி வைத்து ரூமில் அடைத்த வைத்தார். என்னை வெளியில் விட்டார்கள். நான் என் அண்ணனிடம் அந்த விவரங்களை சொன்னேன்.

3. என் அண்ணன் என் அம்மாவிற்கு தகவல் சொன்னான். என் அம்மா விடுதிக்கு வந்த பிறகு என்னை அங்கு இருந்து காவல் நிலையம் அழைத்து சென்றார். அதன் பின்னர் அங்கு இருந்து மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

4. என்னுடன் சேர்த்து எத்தனை மாணவர்கள் படித்து வந்தார்கள் என்றால் 50 மாணவர்கள் படித்து வந்தார்கள். நாங்கள் அனைவரும் ஒரே அறையில் தங்கி இருந்தேமா

என்றால் தனி தனி அறையில் தங்கி இருந்தோம்.நானும் என் அண்ணனும் ஒரே அறையில் தங்கி இருந்தோமா என்றால் ஆமாம். நான் தங்கி இருந்த அறைக்கும் காப்பாளர் தங்கி இருந்த அறைக்கும் எவ்வளவு தூரம் என்றால் 25 அடி இருக்கும். என்னை எதிரி வாயை பொத்தி தூக்கி சென்றபோது உடன் அண்ணன் இல்லை என்றால் அவர் சிறுநீர் கழிப்பதற்காக சென்று இருந்தார். என்னை எத்தனை நாட்கள் அடைத்து வைத்து இருந்தார் என்றால் 3 நாட்கள் அடைத்து வைத்து இருந்தார்.

5. சம்பவம் நடந்த அன்று நான் பள்ளிக்கு சென்றேனா என்றால் இல்லை. அந்த சம்பவம் எப்போது நடந்தது என்றால் இரவு 8 மணி இருக்கும். என்னை அடைத்து வைத்த அன்று என்னுடன் யார் இருந்தது என்றால் எதிரி தான் இருந்தார். அந்த 3 நாட்களும் எதிரி என்னுடன் இருந்தார் என்றால் ஆமாம். விடுதியில் எத்தனை பணியாளர்கள் இருந்தார்கள் என்றால் இரண்டு காப்பாளர்கள் தான் இருந்தார்கள். எதிரி இருந்தார் மற்றொரு பெயர் எனக்கு நினைவு இல்லை. அப்போது போதகராக இருந்த பெயர் எனக்கு நினைவு இல்லை. விடுதியில் வருகை பதிவு செய்வார்களா என்றால் இல்லை. என்னை விடுதி காப்பாளர் அடைத்து பிறது அந்த தகவலை யார் என் அண்ணனுக்கு சொன்னது என்றால் மற்ற பிள்ளைகள் தான் சொன்னார்கள்.

6. மற்ற பிள்ளைகள் அதை தடுக்கவோ அல்லது என்னை காப்பற்றாவோ முயற்சி செய்யவில்லையா என்றால் அவர்கள் என்னை விட வயது சிறியவர்கள். என் அண்ணன் போதகரிடம் புகார் கொடுக்கவில்லையா என்றால் கீழே உள்ள கேட்டை பூட்டி விட்டார்கள். நான் என்னுடைய பெற்றோருக்கு எத்தனை நாட்களுக்க ஒரு முறை போன்

செய்வேன் என்றால் ஒரு நாள் விட்டு ஒரு நாள் போன் செய்வேன். என் அண்ணன் என் அம்மாவிற்கு எப்போது தகவல் கொடுத்தார் என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் எனக்கு தெரியவில்லை. என் அம்மா எப்போது வந்து பார்த்தார் என்றால் அன்றைய தினமே வந்து பார்த்து விட்டார்கள். 15/08/2018 அன்று வந்தார்கள். என் அம்மாவுடன் என் அப்பா, சித்தப்பா ஆகியோர் வந்திருந்தார்கள்.

7. என் அம்மா அப்பா ஆகியோர் விடுதிக்கு வந்தபிறகு அங்கு என்ன நடந்தது என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் எனக்கு தெரியாது. எவ்வாறு அந்த விவரங்களை சொல்லுகிறேன் என்றால் என் அண்ணன் சொன்னான். என் பொற்றோர் வரும் போது மாலை 8 மணி இருக்கும். என்னைஅடைத்து வைத்து இருந்த 3 நாட்களும் என் நண்பர்களோ அல்லது என் அண்ணனோ என்னை தேடி வரவில்லை என்றால் 3 நாட்களும் நான் ரூமில் தான் இருந்தேன். 2 காப்பாளர்களில் எதிரியை தவிர மற்றொருவர் எப்போது பணியில் இருப்பார் என்றால் இரவில் மட்டும் தான் பணியில் இருப்பார்.

8. அந்த மற்றொரு காப்பாளர் என் அறைக்கு வந்த என்னை பார்த்தாரா என்றால் இல்லை. அந்த விடுதியில் எத்தனை வழி உள்ளது என்றால் ஒருவழி மட்டும் தான் உள்ளது. 3 நாட்களும் தண்ணீர் மற்றும் உணவுக்காக என்ன செய்தேன் என்றால் அவர் எதுவும் கொடுக்கவில்லை என் அண்ணன் தான் பாக்கெட்டில் சாப்பாடு கொண்டு வந்து கொடுப்பார். எனக்கு என் அண்ணன் எவ்வாறு சாப்பாடு கொடுப்பார் என்றால் நான் பாத்துரும் செல்வதாக சொல்லிவிட்டு வெளியில் வரும்போது தான் என் அண்ணன் கொடுப்பார். பாத்துரூமில் வரும் தண்ணீரை தான் குடிப்பேன். அந்த விடுதியில் யாராவது

எனக்கு முதலுதவி கொடுத்தார்களா என்றால் மற்றொரு காப்பாளர் தான் எனக்கு ஆயில்மேன்ட் கொடுத்தார்.

9. என்னுடைய பெற்றோரு முதலில் எங்கு அழைத்து சென்றால் என்றால் காவல் நிலையம் அழைத்து சென்றார். புகார் கொடுத்து விட்டு தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 10 மணி இருக்கும். மருத்துவமனையில் என்ன சிகிச்சை அளித்தார்கள் என்றால் நெற்றியில் தையல் போட்டார்கள். கைகளில் மருந்து வைத்து சிகிச்சை அளித்தார்கள். எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்றேன் என்றால் அன்றைக்கே வந்து விட்டோம். மருத்துவமனையில் எவ்வளவு மணிநேரம் சிசிச்சை அளித்தார்கள் என்றால் அரை மணி நேரம் இருக்கும். மருத்துவமனையில் நான் இருந்தபோது போலிசார் மருத்துவமனை வந்த விசாரித்தார்களா என்றால் இல்லை.

10. மருத்துவமனையில் என் அப்பா அம்மாவை தவிர வேறு யாரேனும் வந்து பார்த்தார்களா என்றால் இல்லை. நான் சிகிச்சை முடிந்து மறுநாள் பள்ளிக்கு சென்றேனா என்றால் இல்லை. நான் மீண்டும் எப்போது பள்ளிக்கு சென்றேன் என்றால் அந்த பள்ளியை விட்டு நின்று விட்டு வேறு பள்ளியில் சேர்ந்து விட்டேன். அதன் பிறகு சம்பவம் நடந்த பள்ளிக்கு மீண்டும் செல்லவில்லை என்றால் இல்லை. வழக்கு சொத்து விடுதி மாணவர்களிடம் இருக்காதா என்றால் இருக்காது. யாரிடம் இருக்கும் என்றால் எதிரியிடம் தான் இருக்கும். மற்றொரு காப்பாளரிடம் இருக்காதா என்றால் இருக்காது. நான் என் அறையில் இருந்து சிறுநீர் கழிப்பதற்காக சென்றதாகவும் என் அண்ணன் எனக்கு உணவு

கொடுத்தாவும் மற்றொரு விடுதி காப்பாளர் எனக்கு ஆயில்மென்ட் போட்டதாக சொல்கிறேன் என்றாலும் எனவே என்னை யாரும் அடைத்து வைக்கவில்லை என்றாலும் சரியல்ல.

11. யாருடைய செல்போன் காணாமல் போயிருந்தது என்றால் 12 ஆம் வகுப்பு படித்து இருந்த ஒரு மாணவரின் செல்போன் தான் காணாமல் போயிருந்தது. அவர் பெயர் எனக்கு நினைவு இல்லை. எங்கள் விடுதியில் செல்போன் பயன்படுத்த அனுமதி இல்லை. என் அண்ணன் எங்கள் விடுதியில் உள்ள 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களிடம் இருந்து தான் போனை வாங்கி என் பெற்றோருக்கு தகவல் சொல்லிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. பள்ளி அருகே பெரியவர்கள் விளையாட வருவார்கள் அவர்களிடம் இருந்து தான் என் அம்மாவிற்கு என் அண்ணன் தகவல் சொல்லியுள்ளான். 3 நாட்களும் கதவு பூட்டப்பட்டு இருந்ததா என்றால் காலையில் கதவை திறந்து விடுவார்கள். மாணவர்கள் பள்ளிக்கு சென்றபிறகு மீண்டும் மாலை அறையில் அடைத்து விடுவார்.

12. என் அண்ணன் அந்த 3 நாட்கள் பள்ளிக்கு சென்றாரா என்றால் இல்லை. அந்த 3 நாட்களும் என் அண்ணனும் விடுதியில் தான் இருந்தார் என்றால் சரிதான். என் அண்ணன் என்னுடன் விடுதியில் இருந்த நிலையில் என் அம்மாவிற்கு போன் செய்யததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி ஊருக்கு சென்றதால் 3 மாணவர்களை என்னுடனும் 7 மாணவர்களை என் அண்ணனுடனும் காவல் வைத்து விட்டு தான் சென்றார். என் அண்ணன் அவர்களை மீறி தான் என் அம்மாவிற்கு போன்

செய்துள்ளார். எதிரி எப்போது ஊருக்கு சென்றார் என்றால் சூடு வைத்த மறுநாள் சென்றார்.

13. நான் என்னுடைய குறுக்கு விசாரணையில் எதிரி 3 நாட்களும் என்னுடன் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல. எனக்கு சூடு வைத்தபிறகு தான் அவர் ஊருக்கு சென்றார். போலிசார் விசாரணையில் நான் கொடுத்த வாக்குமூலம் சரியாக என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்தது போன்று எதிரி அந்த 3 நாட்களும் விடுதியில் இல்லை என்றாலும் நான் என் அம்மா மூலமாக எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணனும் என்னை அடைத்த வைத்ததையோ தாக்கியதையோ அல்லது சூடு வைத்ததையோ பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

S/d- K. Nilavarasan, 12.06.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 52/2022**

**PW.1**

**Date: 12.06.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. நிர்மலாமேரி | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | லியோபிரான்சிஸ் | மதம் | |
| கிராமம் | கடலாடிகுளம் | தொழில் | |
| வட்டம் | விழுப்புரம் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **12th June 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை.கற்றறிஞர் வழக்கறிஞர் அஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

1. நான் இல்லதரசியாக உள்ளேன். எதிரியை தெரியும். எனக்கு 2 ஆண் குழந்தையும் 1 பெண் குழந்தையும் உள்ளது. சம்பவம் நடந்த கடந்த 2018 ஆம் ஆண்டு கந்தன்சாவடியில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தேன். நான் அப்போது என்னுடைய மகன்கள் சகாயாராஜ் , சின்னப்பராஜ் ஆகியோரை கோவளம் சர்ச் உள்ளே உள்ள ஒரு மேல்நிலை பள்ளியில் படிக்க வைத்தேன். அப்போது சகாயராஜ் 8 ஆம் வகுப்பும்

சின்னப்பராஜ் 7 ஆம் வகுப்பும் படித்து வந்தார்கள். அவர்கள் இருவரும் அங்கு இருந்த விடுதியில் தங்கி இருந்தார்கள்.

2. 15/04/2018 அன்று மாலை என்னுடைய பெரியமகன் எனக்கு போன் செய்து எனது சின்ன மகன் சின்னப்பராஜ்க்கு சூடு ஏதேனும் வைக்க சொன்னீர்களா என்று கேட்டான். நான் இல்லை என்று சொன்னேன். 3 நாட்களாக நான் போன் செய்தால் என் பிள்ளைகள் போனை எடுக்க கூடாது என்று சொல்லி அங்கு இருந்தவர்கள் அடித்து ரூமில் அடைத்து வைப்பதாகவும் சொன்னான். அதன் பின் விடுதியில் இருந்து சுவற்றை தாண்டி அருகில் விளையாடி கொண்டு இருந்த பசங்களிடம் இருந்து போனை வாங்கி நடந்த விவரத்தை என்னிடம் சொன்னததாகவும் சொன்னான்.

3. அங்கு காப்பாளராக இருந்த எதிரி என் மகன் சின்னப்பராஜ் வேறு ஒரு பையனின் போனை அவர் திருடியதாக கருதி அவனது முகத்தில் கன்சசூட்டர் போன்று ஒன்றை சுடுசெய்து என் மகன் சின்னப்பராஜீன் முகத்தில் சூடு வைத்ததாக சொன்னான். தம்பியை 3 நாட்களாக இரவில் செம்ம அடி அடித்ததாக சொன்னான். நானும் என் கணவரும் அந்த விடுதிக்கு சென்றோம். நான் சென்று பார்த்தபோது என் மகன் சின்னப்பராஜக்கு இடது நெற்றில் ஒரு வெட்டு காயம். உடம்பில் சூடு காயங்கள் காணப்பட்டது. 3 நாட்களாக சாப்பாடு போடாமல் இருந்துள்ளார்கள்.

4. என் பெரியமகன் சகாயராஜ் சின்னப்பராஜக்கு பாத்துரூமில் வைத்து தனது பாக்கெட்டில் சாப்பாடு கொண்டு சென்று கொடுத்ததாக சொன்னான். அங்குபொறுப்பில்

இருந்த போதகர் அந்த விசயத்தை வெளியில் சொன்னால் சர்ச்சின் பெயர் கெட்டு விடும் என்று வெளியில் சொல்லவேண்டாம் என்று வற்புறுத்தினார். அதன் பின்னர் சம்பவம் சம்பந்தமாக கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (**புகார்**) உள்ள கையொப்பம் என்னுடைது தான். அந்த புகார் நான் கொடுத்தது தான். (**14/06/2018 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதன் பின்னர் காயம்பட்ட என் மகனை செட்டிநாடு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

5. நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். புகார் விவரங்கள் எனக்கு தெரியும். புகாரில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை என் மகன்கள் எனக்கு போன் பேசுவதாக நான் குறிப்பிட்டு இருந்தால் அது தவறு. வார இறுதியில் தான் போன் செய்வார்கள். நான் புகாரை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் என்னுடைய சின்ன மகனை எத்தனை மணிக்கு விடுதிக்கு சென்று பார்த்தேன் என்றால் மாலை 5 முதல் 6 மணி இருக்கும். நான் விடுதிக்கு சென்றவுடன் யாரை முதலில் பார்த்தேன் என்றால் என் மகன்களை தான் பார்த்தேன். நான் நிர்வாகிளை பார்க்கமல் நேரடியாக என் மகன்களை பார்த்தேனா என்றால் ஆமாம். அங்கு நிர்வாகிகள் இல்லை. அதனால் என் மகன்களை நேரடியாக பார்த்தேன்.

6. நான் எனது சின்ன மகனை பார்த்தவுடன் என்ன செய்தேன் என்றால் என்னுடைய மகன் தான் என்னை அழைத்து கொண்டு எனது சின்ன மகனை காண்பித்தான். என் சின்னமகனை நான் எங்கு பார்த்தேன் என்றால் பாதர் அறைக்கு அருகில் உள்ள அறையில் தான் என் மகனை பார்த்தேன். காவல் அதிகாரி யார் என்னை எனது மகனை மருத்துவமனைக்க அழைத்து செல்லும்படி சொன்னது என்றால் அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. நான் விடுதி நிர்வாரிகளை பார்த்து எனது மகனின் நிலையை குறித்த கேட்கவில்லையா என்றால் யாரும் அங்கு இல்லை. சம்பவம் எப்போது நடந்தது என்றால் 15/04/2018 அன்று நடந்தது.

7. நான் எத்தனை மணிக்கு என் மகனை அனுமதித்தேன் என்றால் மாலை 7 – 8 மணி இருக்கும். அதன்பின் பாதரும் ஒரு சிஸ்டரும் அங்கு வந்து கோவிலில் பேசலாம் வாருங்கள் என்று சொல்லி என்னை அழைத்து வந்து விட்டார்கள். மருத்துவமனைக்கு என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் என் கணவரும் குழந்தையும் வந்தார்கள். யார் பாதர் மற்றும் சிஸ்டருக்கு மருத்துவமனையை குறித்து தகவல் சொன்னது என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் என் மூத்த மகன் சொன்னதின் பேரில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அங்கு சென்றபிறகு அங்கு இருந்த மற்ற பிள்ளைகளும் விவரங்களை சொன்னார்கள். நான் முதலில் மருத்துவமனை சென்றேனா அல்லது புகார் கொடுத்தேனா என்றால் புகார் தான் கொடுத்தேன்.

8. எனது மகன்கள் எந்த போனில் இருந்து பேசுவார்கள் என்றால் கோவிலில் அனைத்து பெற்றோர்களும் பேசுவதற்குபொதுவான ஒரு போன் உள்ளது அதில் தான் என் மகன்கள் என்னிடம் பேசுவார்கள்.

**மறுவிசாரணை** – இல்லை

S/d– K. Nilavarasan, 12.06.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.